செய்தி வெளியீடு எண் :154 நாள் :15.03.2017

**திருவள்ளுர் மாவட்டம் பூண்டி ஊராட்சி ஒன்றியம் நாராயணபுரம் மற்றும் திருவாலங்காடு ஊராட்சி ஒன்றியம் நார்த்தவாடா ஊராட்சிகளில் நடைபெற்றுவரும் சீமை கருவேலம் மரங்களை அகற்றும் பணிகளை மாவட்ட முதன்மை நீதிபதி திரு.டி.இளங்கோவன் அவர்கள் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி இ.ஆ.ப., ஆகியோர் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள்.**

~~~~~

திருவள்ளுர் மாவட்டம் பூண்டி ஊராட்சி ஒன்றியம் நாராயணபுரம் மற்றும் திருவாலங்காடு ஊராட்சி ஒன்றியம் நார்த்தவாடா ஊராட்சிகளில் நடைபெற்றுவரும் சீமை கருவேலம் மரங்களை அகற்றும் பணிகளை மாவட்ட முதன்மை நீதிபதி திரு.டி.இளங்கோவன் அவர்கள் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி இ.ஆ.ப., ஆகியோர் இன்று (15.03.2017) நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள்.

மாவட்ட முதன்மை நீதிபதி அவர்கள் கூறியதாவது கருவேலம் மரங்களின் வேர்கள் நிலத்தில் ஆழமாக சென்று பரவும், எனவே இம்மரங்களின் வேர்கள் நிலத்தடி நீரை வெகுவாக உருஞ்சிவிடுவதால் மற்ற செடிகொடிகள் மற்றும் மரங்கள் வளர்வது பாதிக்கப்படுவதால் வறட்சியும் ஏற்படுகிறது. சென்னை உயர்நீதிமன்ற, மதுரை கிளை உத்திரவின்படி சீமை கருவேலம் மரங்களை முற்றிலும் அழிக்கப்பட வேண்டும், என்பதற்கிணங்க மாவட்டத்தில் அனைத்து பகுதிகளிலும் கருவேல மரங்கள் துரிதமாக அகற்றப்பட்டு வருகிறது. இதற்கு பொதுமக்கள் தங்கள் நிலங்களில் உள்ள சீமை கருவேலம் மரங்களை விரைந்து அகற்றிட ஒத்துழைப்பு தரவேண்டும். மேலும் தன்னார்வ தொண்டு நிறுவனங்கள், மாணவர்கள், அரசு அலுவலர்கள் ஆகியோர் இணைந்து கருவேல மரங்களை அகற்ற சம்மந்தப்பட்ட மாவட்ட நிர்வாகத்திற்கு ஒத்துழைக்க வேண்டும் என்று கூறினார்.

இவ்வாய்வின்போது உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) திரு. ஜாகிர்உசேன், வட்டாட்சியர்கள் திருமதி. கார்குழலி (திருவள்ளுர்), திரு. பரணிதரன் (திருத்தணி) மற்றும் அரசு அலுவலர்கள் உடன் இருந்தனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருவள்ளுர்.**
~~~~~